



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (14.05.2025) மகாராஷ்டிரா மாநிலம், மும்பை, வாடாவில் J.Kumar Infraprojects என்ற தொழிற்பட்டறைக்கு நேரில் சென்று, சென்னையில் சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்பட்டு வரும் நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு தேவையான இரும்பு தூண்கள் (Iron Pillars), தூலகங்கள் (Beams) ஆகியவற்றின் தரம் மற்றும் அளவுகள் குறித்து பார்வையிட்டு அந்நிறுவன தொழில்நுட்ப பணியாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைத் துறை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அலகு) கே.ஜி.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) .இரா.சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### பண்பும், அரசியல் முதிர்ச்சியும், மதிக்கூர்மையும் பெற்ற

# பேராசிரியர் காதர் மொகிதீன் தலைமையில் - இந்திய யூனியன் முஸ்லிம் லீகின் சீரிய மக்கள் பணி சிறக்கட்டும்!

### மூன்றாவது முறையாக தேசியத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதை அடுத்து – முதல்வர் வாழ்த்து!

உதகை. மே.16-

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசிய தலைவராக மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட பேராசிரியர் காதர் மொகிதீன் அவர்களுக்கு வாழ்த்து தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

இந்திய யூனியன் முஸ்லீம் லீக் தேசிய தலைவராக மூன்றாவது முறையாக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மதிப்பிற்குரிய பேராசிரியர் காதர் மொகிதீன் ஐயா அவர்களுக்கு எனது



வாழ்த்துகள்!

பண்பும் அரசியல் முதிர்ச்சியும் மதிக்கூர்மையும் பெற்ற பேராசிரியர் ஐயா அவர்களின் தலைமையில், இந்தியாவின் மதச்சார்பின்மையையும் மதநல்லிணக்கத்தையும் வலுப்படுத்தும் இந்திய யூனியன் முஸ்லீம் லீக்இன் சீரிய மக்கள் பணி சிறக்கட்டும்!

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்படும்

# உயர் மட்டப் பாலத்திற்கான இரும்புத் தூண்களை - மும்பையில் அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு செய்தார்!

## தரம் மற்றும் அளவுகளையும் சோதனையிட்டார்!

மும்பை, மே 16 -

மகாராஷ்டிரம் மாநிலம், மும்பையில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு , சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்படவுள்ள உயர் மட்டப் பாலத்திற்கான இரும்பு தூண்கள்(Iron Pillars), தூலகங்கள்(Beams) அதன் தரம் மற்றும் அளவுகளை ஆய்வு செய்தார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று முன்தினம் (14.05.2025) தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, மகாராஷ்டிரா மாநிலம், மும்பை, வாடா என்னும் இடத்தில் அமைந்துள்ள M/s.J.Kumar Infraprojects என்ற தொழிற்பட்டறையில் தயாரிக்கப்பட்டு வரும், சைதாப்பேட்டை முதல் தேனாம்பேட்டை வரை, நான்கு வழித்தட உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு, இரும்பு தூண்கள்(Iron Pillars), தூலகங்கள் (Beams) அதன் தரம் மற்றும் அளவுகள் ஆகியவற்றை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை மாநகரின் மையப்பகுதியில் உள்ள மிக முக்கிய சாலையான அண்ணா சாலையில், போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வண்ணம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை 3.20 கி.மீ. தூரத்திற்கு, 15 மீ. அகலத்திற்கு உயர்மட்ட சாலை அமைக்க ரூ.621 கோடி மதிப்பீட்டில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, 19.1.2024 அன்று முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

**புதிய தொழில் நுட்ப முறையில் பணிகள்!**

முக்கிய அம்சங்களான, உயர்மட்ட சாலை மேம்பாலம், மெட்ரோ இரயில் சுரங்கபாதை உள்ள இடங்களில் 2 கி.மீ. தூரத்திற்கு அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இடங்களில் மண்ணின் உறுதித் தன்மை (CBR) குறைவாக உள்ளது. அதனை அதிகரிக்கும் வகையில் “ஜியோ சிந்தெட்டிக் லேயர்ஸ் (Geo Synthetic Layers)” என்ற புதிய தொழில்நுட்ப முறையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த புதிய தொழில்நுட்பத்தினால் மண்ணின் உறுதித் தன்மை அதிகரித்து பாலத்தைத் தாங்கும் வகையிலும் மற்றும் மெட்ரோ இரயில் சுரங்கப்பாதை பாதிக்காத வகையில் அமைக்கப்பட பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த சாலையில் 7 முக்கிய சாலைச் சந்திப்புகளை கடக்கும் வண்ணம் இந்த உயர்மட்டச் சாலை மேம்பாலம் அமைக்கப்பட்டு வருகிறது. இதனால், போக்குவரத்து நெரிசல் அதிகம் உள்ள காலங்களில் பயண நேரம் 30 முதல் 35 நிமிடம் ஆகிறது. இந்த உயர்மட்டப் பாலம் அமைக்கப்படுவதால் பயண நேரம் 3 நிமிடமாக குறையும்.

**தூலகங்களின் தரம் குறித்து ஆய்வு!**

ஆகவே, சைதாபேட்டை முதல் தேனாம்பேட்டை வரை அமைக்கப்படும் உயர் மட்டப் பாலத்திற்கு பயன்படுத்தப்படவுள்ள இரும்பு தூண்கள் தயாரிக்கப்படும் மும்பை, வாடாவில் உள்ள M/s.J.Kumar Infraprojects என்ற தொழிற்பட்டறையில் தயாரிக்கப்பட்டு வரும் இரும்பு தூண்கள்(Iron Pillars), தூலகங்கள் (Beams), அதன் தரம் மற்றும் அளவுகளை, பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

இந்த நிகழ்வின்போது, தலைமைப் பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கே.ஜி.சத்தியபிரகாஷ், சிறப்பு அலுவலர் (தொழில் நுட்பம்) இரா.சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### களத்தில் பணி செய்யக்கூடிய நிர்வாகிகளுடன் கலந்துரையாடி

# தேர்தல் பணிகளை காழ்ப்புணர்வின்றி ஆற்றிடுவீர்!

## நெல்லை மத்திய மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் கனிமொழி எம்.பி. சிறப்புரை!

நெல்லை.மே.16-

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் கூட்டம் வண்ணார்பேட்டை ஆப்பிள் ட்ரீ கூட்டரங்கில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று கழக நிர்வாகிகளின் கருத்துக்களைக் கேட்டறிந்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் கூட்டம் வண்ணாரப்பேட்டை ஆப்பிள் கூட்டரங்கில் மாவட்ட துணைச் செயலாளர் தர்மன் தலைமையில் நடைபெற்றது. நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு .அப்துல் வகாப் எம்.எல்.ஏ வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளு மன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று பேசியதாவது.

வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலில் கால நிலவரம் குறித்து தெரிந்து கொள்ள அண்ணன் தளபதி அவர்களின் உத்தரவுப்படி இந்த கூட்டம் நடத்தப் படுகிறது.தேர்தலுக்கான வியூகங்கள் வகுப்பதற்கு களநிலவரம் தேவைப் படுகிறது. மாவட்ட அளவில் களத்தில் பணி செய்யக்கூடிய நிர்வாகிகளான உங்களது கருத்துக்களை கேட்டு தேர்தல் பணிகளை செய்வதற்கான வியூகங்கள் வகுப்பதற்கு இந்த ஆலோசனை கூட்டம் நடத்தப்படுகிறது. விருப்பு வெறுப்புகளை கடந்து காழ்ப்புணர்ச்சி இல்லாமல் உங்களது கருத்துக்களை யாருடைய மனதையும் புண்படுத்தாமல் தெளிவாக எடுத்துரைத்தால் தேர்தல் களத்தை சந்திப்பது எளிதாக இருக்கும். தேர்தல் நெருங்குவதால் கழக அரசின் திட்டங்களை மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசினார்.

பின்னர் கழக நிர்வாகிகளின் கருத்துக்களை கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து கழக துணைப் பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பல்வேறு ஆலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

நிகழ்வில், நெல்லை தொகுதி பார்வையாளர் எஸ்.முத்துச்செல்வி, கழக சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு மாநில தலைவர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம்.மைதீன்கான்,

கழக சட்டதிட்ட திருத்த குழு உறுப்பினர் சுப.சீதா



ராமன்,வர்த்தகர் அணி மாநில இணை செயலாளர் மாலை ராஜா,மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ. பெருமாள்,மாவட்ட துணை செயலாளர் கள் சுரேஷ்,கிரிஜா குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ஏ.எல்.எஸ். லெட்சுமணன்,பேச்சிப் பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர்கள் சரவணன், நடராஜன்,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன், துணை செயலாளர் கள் அப்துல் கையூம்,பாலமுருகன் என்ற பிரபு,சுதா மூர்த்தி, மாநகர பொருளாளர் அண்ணாதுரை, மாவட்ட பிரதிநிதிகள் வேல்சாமி பாண்டியன், ராஜேந்திரன், கார்டன் சேகர்,வெங்கடேஷ், இசக்கிபாண்டியன், சுரேஷ், பகுதி செயலாளர்கள் பூ. சுப்பிரமணியன், (தச்சை) அண்டன் செல்லத்துரை (பாளை)

துபாய் சாகுல் (மேலப் பாளையம் )

நமச்சிவாயம் என்ற கோபி (நெல்லை) மானூர் மேற்கு ஒன்றிய செயலாளர்கள் அன்பழகன்,அருள் மணி,மாரியப்பன், பேரூர் கழக செயலாளர்கள் செல்வபாபு, பேச்சிகுட்டி, வட்ட கழக செயலாளர்கள் முத்துராமன், சடாமுனி,மனோகரன், பாப்பு குமார்,கணேசன்,பட்சிராஜன், மேகைசெல்வம், கிருஷ்ணன்,தென்கரை முத்து,பத்மராஜ்,சுடலை ராஜ்,செய்யது முகைதீன், மனோகரன்,கதிரேசன், தளவாய், அருள் இளங்கோ, பேபிகோபால், ஜெயின் உசேன்,பிரான்சிஸ்,ஆவின். கல்யாணசுந்தரம்,பால மகேஷ், பெர்க்மான்ஸ் பாஸ்கர்,ஆறுமுக பாண்டியன்,செல்வகுமார், பாலகிருஷ்ணன்,ஜாய் மரகதம்,இசக்கி, சாகுல் ஹமீது, சாலி மௌலானா, காஜா மைதீன், உஸ்மான், அஹமது பாதுஷா, அலி சேக் மன்சூர்,ராபர்ட் செல்லையா, அந்தோணி,ஆறுமுகம், வினோத் குமார், மணிகண்டன்,லெனின், வேல்முருகன், ஆறுமுகம்,சேக் மன்சூர்,புயல் மீனாட்சி, மலைக்கண்ணன், ஆனந்த பெருமாள், அருள் சுந்தரராஜன், மாரிமுத்து, குமரேசன்,செந்தில் முருகன்,அணி அமைப்பாளர்கள் வில்சன் மணித்துரை, பாலசுப்பிரமணியன், மகேஸ்வரி, அனித்தா, தொப்பி மைதீன்,சின்னத்துரை, ஷேக் தாவூத்,பல்க் குமார், இஸ்மாயில், குழந்தை இயேசு,அருள் இளங்கோ, நவநீதன்,காமினிதேவன், அசரியாஸ்டீபன், நவ்ஷாத், கழகப் பேச்சாளர்கள் நெல்லை ரவி,முத்தையா,ராவணன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர் .

இந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

திக்கெட்டும் தித்திக்கும் திராவிட பேரரசின் மாமன்னர் நானிலம் போற்றும் நான்காண்டு சாதனையின் நாயகர் இந்திய தேசத்தின் முன்மாதிரி முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பொறுப்பேற்று 2025 மே மாதம் 7ம் நாளில் நான்கு ஆண்டுகள் நிறைவடைந்து 5 வது ஆண்டு தொடங்கி இருக்கிறது.நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு என திட்டங்கள் பல தீட்டி தமிழ்நாட்டின் பொற்கால நல்லாட்சியை பல்லாண்டு தொடங்கிட நல்வாழ்த்துக்கள் பாராட்டுக்கள் இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

பாளையங்கோட்டையில் உள்ள திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு வளாகத்தில் அமைந்துள்ள அண்ணா விளையாட்டு அரங்கில் ரூபாய் 1.48 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்ட செயற்கை இழை வளை கோல் பந்து மைதானத்தை (05052025 அன்று) சென்னையிலிருந்து காணொளி காட்சி வாயிலாக விளையாட்டு வீரர்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்த துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மிகுந்த நன்றியை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்கிறது.

முத்தமிழ் வித்தகர் கலைஞர் தந்திட்ட தவப்புதல்வி கழக துணைப் பொதுச் செயலாளர் கழக நாடாளுமன்ற குழு தலைவர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி கருணாநிதி அவர்கள் அகில இந்திய அளவில் கழகத்தின் மதிப்பு உயர காரண கர்த்தாவாக விளங்குவதோடு நாடாளுமன்றத்தில் நாடதிர தமிழ்நாட்டிற்காகவும்,தமிழினத்திற்காகவும்,தமிழ் மொழிக்காகவும் ஓங்கி குரல் எழுப்பி தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டியுள்ளார்.பல்வேறு பணிகள் இடையேயும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு நெல்லை மத்திய மாவட்ட கழக நிர்வாகிகளுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி உரையாற்ற வருகை தந்து சிறப்பித்தமைக்கு இதய பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சரும் கழக முதன்மை செயலாளரும் நெல்லை மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே. என்.நேரு உயரிய ஆலோசனைப் படியும் சீரிய வழிகாட்டுதல் படியும் நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க சிறப்பாக முறையாக கழக பணிகளை தொடர்ந்து தொய்வின்றி செம்மையாக ஆற்றுவது என்றும்.

தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்ட் என்று கல்வியாளர்களால் வர்ணிக்கப்படுகிற பாளையங்கோட்டை மூன்று ஏக்கர் பரப்பளவில் ரூபாய் 75 கோடி மதிப்பேட்டில் மாபெரும் பிரம்மாண்டமான நவீன டிஜிட்டல் நூலகம் அமைய உத்தரவிட்டதுடன் அந்நூலகத்திற்கு நெல்லை சீமைக்கு பெருமையும்,புகழும், வரலாற்றுப் பெருமையையும் தேடிதந்த நம் மண்ணின் மைந்தர் விடுதலைப் போராட்ட வீரர் கண்ணியமிகு ’காயிதே மில்லத்’ பெயர் சூட்டப்படும் என்று அறிவித்த முதலமைச்சர் கழக தலைவர் அவர்களுக்கு மகிழ்ச்சியுடன் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழ் திருநாட்டை ஆறு முறை ஆண்ட திராவிட முன்னேற்ற கழகம் தமிழ்நாட்டின் சமூக பொருளாதார முன்னேற்றத்தை உறுதி செய்து ஒவ்வொரு குடும்பமும் பயன்பெறும் வகையில் திட்டங்களை நிறைவேற்றி நவீன தமிழ்நாட்டை கட்டமைத்து கழக அரசு 7 வது முறையாக 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் மகாதான வெற்றி பெற்று ஆட்சி அமைக்க திட்டமிட்டு வியூகங்கள் அமைத்து செயலாற்றும் முதலமைச்சர்

அவர்களின் வழியில் நெல்லை மத்திய மாவட்டத்திற்கு உட்பட்ட திருநெல்வேலி சட்டமன்ற தொகுதி,பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி ஆகிய 2 தொகுதிகளிலும் அமோக வாக்குகள் வித்தியாசத் தில் கழகம் வெற்றி பெற வீடு,வீடாக சென்று ஒவ்வொரு வாக்காளரையும் நேரடியாக சந்தித்து கழக அரசின் சாதனைகளை எடுத்துரைத்து தீவிரமாக பாடுபட இன்றிலிருந்து சபதம் ஏற்று உறுதியுடன் உடன்பிறப்புகள் அனைவரும் உழைத்திட இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

பாளையங்கோட்டை ஒன்றிய செயலாளர்,பாளையங்கோட்டை ஒன்றிய குழு தலைவர்,சிவந்திபட்டி ஊராட்சி மன்ற முன்னாள் தலைவராகவும் சிறப்பாக செயல்பட்ட கே.எஸ்.தங்கபாண்டியன் அவர்கள் மறைவுக்கு இக்கூட்டம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளது.





கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர்.இரா.இலட்சுமணன் ஆகியோர் வானூர் சட்டமன்ற தொகுதி, வழுதாவூரில் புதிதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தை திறந்து வைத்தார்கள். விழாவிற்கு ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன் தலைமை தாங்கினார். மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் இ.புஷ்பராஜ், வே.கணேசன், வி.ஜி.பிரபாகரன், கு.செல்வமணி, K.S.ராஜி, திருவக்கரை பாஸ்கரன், TNJ.சம்பத், சிவக்குமார், இரா.கண்ணப்பன், ஒன்றிய பொருளாளர் மகேந்திரவர்மன், மதியழகன், லட்சுமி முருகன், கருணாநிதி, குணசேகரன், முருகன், பிரவீன் குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் தும்பேரியில் நடைபெற்ற சாதனைக விளக்க பொதுக் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமைக் கழக பேச்சாளர் சாவல்பூண்டி மா.சுந்தரேசன் ஆகியோர் கழக ஆட்சியின் நான்காண்டு சாதனைகளை குறித்து சிறப்புரை ஆற்றினார்கள். நிகழ்ச்சியில் நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.சாமுடி தலைமை தாங்கினார். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் தே.பிரபாகரன், நாட்றம்பள்ளி ஒன்றியக் குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன், நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் துணைதலைவர் டி.தேவராஜி, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சி.மஞ்சுளா, மாணவரணி பவித்ரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் தர்மராஜன், பொன்னுசாமி, லதாபார்த்திபன், வெங்கடேசன், அரங்கநாதன், கிருஷ்ணமூர்த்தி, முருகேசன் மற்றும் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.